**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register) CC.356/2023
Sessions)

(Prosecution P.W.10
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | P.முத்துக்குமார் | -- | |
| Father's Name | பொன்னுச்சாமி | Calling | |
| Village | M.புதுப்பட்டி | Religion | |
| Taluk | | Age | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th Day of July 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.புதுப்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 22.02.2023 ம் தேதி மல்லி காவல் நிலைய் ஆய்வாளராக பணிபுரிந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.தங்கவேல் என்பவர் பதிவு செய்த மல்லி காவல் நிலைய குற்ற எண்.15/2023 பிரிவுகள் 279, 304(A) இ.த.ச. வழக்கினை அன்றைய தினமே எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 21.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் செந்தில்குமார், விக்னேஷ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்,.** மேற்படி சம்பட இட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 23.02.2023 ம் தேதி காலை 08.00 மணிக்கு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன செல்வக்குமார் என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.** பின்னர் சாட்சிகள் திவ்யா, பழனிச்சாமி, சாந்தி,வெற்றிவேல், அய்யனார், முத்துக்குமார், கார்த்திகேயன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன நபரின் இறப்பிற்கான உண்மைக் காரணம் அறியும்பொருட்டு மேற்படி பிரேதத்தை உடற்கூறாய்வு செய்வதற்காக தலைமைக்காவலர் பொன்னுச்சாமி என்பவர் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்னர் 28.02.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான முருகன் என்பவர் தானாக நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து உரிய பதிவுகள் செய்து பிணையில் விடுவித்தேன். அன்றைய தினம் இவ்வழக்கில் இறந்துபோன நபர் ஓட்டிவந்த TN 37 DW 9137 என்ற பதிவெண்

கொண்ட பாஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை ஸ்ரீவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். 01.03.2023 ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ஓட்டி வந்த வாகனம் TN 95 H3940 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஸ்விப்ட் காரை ஸ்ரீவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 15.03.2023 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. பூர்ணலதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகள் பெற்றேன். அன்றைய தினம் சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சந்தனமாரியப்பன் மற்றும் பிரேத பரிசோதனை செய்த அரசு மருத்துவர் சிந்தியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையும் பெற்றேன். **பிரேத பரிசோனை அறிக்கை அ.சா.ஆ.8** பின்னர் தலைமைக் காவலர் பொன்னுச்சாமி, சார்பு ஆய்வாளர் தங்கவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304 (A) ன் படி நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் முதல் தகவல்அறிக்கை 22.02.2023 அன்று 20.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மல்லி காவல் நிலையத்திலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்திற்கு அதிகபட்சம் அரை மணி நேரத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 24.02.2023 அன்று மாலை 05.00 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 திவ்யாவும், அ.சா.2 பழனிச்சாமியும் மருத்துவமனைக்கு சென்றபோது அவர்களுக்கு தகவல் சொன்ன நபர் அங்கு இருந்ததாகவோ அவர்களிடம் விசாரித்து தெரிந்துகொண்டதாகவோ புகாரிலோ வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்ததாகச் சொல்லக்கூடிய சாட்சிகள் புகார் கொடுக்கவோ அறிவேன் சாட்சியாக புகாரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையிலோ புகாரிலோ திவ்யா மற்றும் வெற்றிவேலின் போன் நம்பர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்வில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்சில் இறந்துபோன நபரும் எதிரியும் சென்றனர் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 13 வீடுகள் உள்ளது என்னறால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளும் பார்வை மகஜர் சாட்சிகளும் இறந்துபோன நபரின் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சாமிநத்தம் பஸ் ஸ்டாப்பிற்கும் சாமிநத்தம் விலக்கிற்கும் சுமார் 40 மீட்டர் தூரம் இருக்கும். பார்வை மகஜரில் சாமிநத்தம் பஸ் ஸ்டாப் காட்டவில்லை என்றால் சரிதான். விபத்து பாலத்தின் மத்திய பகுதியில் நடந்ததாக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறிவியல் ரீதியாக சம்பவல நடைபெற்றதாக சொல்லப்படும் ரோட்டின் அகலம் மற்றும் மண்ரோட்டின்

அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் டயர் மார்க் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக வரைபடத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். வாகனங்களின் உடைந்த பாகங்களோ இரத்தக் கறையோ இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் வரைபடம் நீதிமன்றத்துக்கு 27.06.2023ம் தேதி தான் பெற்பபட்டுள்து என்றால் சரிதான். பார்வை மகஜர் சொன்ன தேதியில் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தகவல் அளித்தவர் என்ற இடத்தில் ஆம்புலன் ஓட்டுநர் மற்றும் எதிரே வந்த கார் ஓட்டுநர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சாமிநத்தம் பஸ் ஸ்டாப் அருகில் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ சாட்சிகள் என்ன காரணத்திற்காக சம்பவ இடத்திற்கு சென்றனர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் விவரம் யார் மூலம் தெரிந்துகொண்டதாக புலன்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனங்கள் சம்பவ இடத்தில் வைத்து மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பும் வரை சம்பந்தப்பட்ட வாகனங்கள் காவல் நிலையத்தில் இருந்தது என்றால் சரிதான். அ.சா.3 மற்றும் 4 ஐ எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரணை செய்தேன் என்றால் 23.02.2023 ம் விசாரித்தேன் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை காலதாமதாமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளாக வெற்றிவேல் மற்றும் அய்யனாரை சம்பவ சாட்சிகளாக பின்னிட்டு உற்பத்தி செய்ததால் தான் காலதாமதமாக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.07.10 16:30:32 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**